IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

TENKASI.

**MCOP.No.76/2020**

**நாள்– 08.08.2023**

**ஸ்ரீமௌனிகா**

**ம.சா.1** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

எனக்கு திருமணமாகி எனது கணவருடன் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் வேலாயுதபுரத்தில் நான் குடியிருந்து வருகிறேன். எனது கணவர் தனியார் பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. என்னுடைய தாயார் பெயர் இந்திரா. அவர் இறந்துவிட்டார். என் தாயாரின் இறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த விபத்தில் இறந்தவர் என்னுடைய தகப்பனார் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய அப்பா கொத்தனார்வேலை செய்து மாதம் ரூ.18 ஆயிரம் வரை சம்பாதித்தார் என்பதற்கு அவருடைய வயது, வேலை ஆகியவற்றைக் காண்பிக்கும் ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் ஓட்டிச் சென்ற டிஎன் 76 ஏஎல் 0667 என்ற வாகனம் செந்தில்குமார் என்பவருக்கு பாத்தியப்பட்டதாகும் என்றால் சரிதான். அந்த வாகனம் ரிலையன்ஸ் காப்பீடு கழகத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. என்னுடைய அப்பா ஓட்டிச் சென்ற வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீடு கழகத்தை தரப்பினர்களாக சேர்க்க கடமைப்பட்டிருக்கிறேன் என்றும், அவர்களைச் சேர்க்காத தோஷத்திற்காக வழக்கு பாதிப்படைந்திருக்கிறது என்றால் சரியல்ல. என்னுடைய அப்பா அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் இருசக்கர வாகனத்தை ஓட்டி முன்னால் சென்றுகொண்டிருந்த 1ம் எதிர்மனுதாரர் ஓட்டிச் சென்ற லாரியின் பின்புறம் மோதி அவர் தான் விபத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் லாரியை மெதுவாகவும்,

கவனமாகவும் ஓட்டிச் சென்று சைகை காட்டி இடதுபுறமாக திரும்பியதை கவனிக்காமல் என்னுடைய அப்பா தான் வேகமாக வந்து லாரியில் மோதியிருக்கிறார் என்றால் சரியல்ல. என்னுடைய அப்பா ஓட்டிச் சென்ற வாகனம் இலகு ரக வாகனம் என்பதாலும், 1ம் எதிர்மனுதார் ஓட்டிச் சென்ற வாகனம் கனரக வாகனம் என்பதாலும் 1ம் எதிர்மனுதாரர் மீது பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் வாகனத்தை ஓட்டிச் செல்லும் போது தலைக்கவசம் அணியாமல் இருந்ததால் தான் விபத்தில் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. என்னுடைய அப்பாவிற்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது. இந்த விபத்தானது என்னுடைய அப்பாவின் கவனக்குறைவினால் ஏற்பட்டதால் இந்த 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல. என்னுடைய சகோதரி ராஜேஸ்வரிக்கு திருமணம் ஆகவில்லை. நான் என்னுடைய தகப்பனாரின் வருமானத்தை நம்பி தான் வாழ்ந்து வந்தேன் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் இழப்பீடுகளை மிகைப்படுத்தி கோரியிருக்கிறேன் என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து எங்களுடைய கோரிக்கை மனுவைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.08.08 16:46:11 +0530